முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கரன்கோவில்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.406/2015**

(CNR.No. TNTS1A-000196-2015)

சாந்தம்மாள் ....வாதி

அந்தோணி
(வாதிக்கு பவர் ஏஜெண்டு நிலமையில்)

(**இ.ம.எண்.12/2026 மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு 12.02.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, வாதி பொது அதிகார முகவர் மூலமாக வழக்கை மேல்நடத்த அனுமதிக்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

/எதிர்/

1. தங்கமணி
2. கடற்கன்னி
3. பரமசிவம் (இறந்தவர்)
4. சின்னமாரியப்பன் (இறந்தவர்)
5. சண்முகவேல்
6. ஜெபசிங்
7. பால்ராஜ்
8. வேதமாணிக்கம்
9. அப்பாத்துரை
10. தாயம்மாள்
11. நாகராஜ்
12. நாகையா
13. நாகப்பன்
14. நாகேந்திரன்
15. நாகர்
16. அந்தோணியம்மாள்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:23:34 +0530

17. மகேஸ்வரி
18. ராஜேஸ்
19. அருண் ....பிரதிவாதிகள்

(**காலம்சென்ற 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை கட்சி சேர்க்க அனுமதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.03/2019 13.12.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்பேரில், காலம்சென்ற 3ம் பிரதிவாதியின் வாரிசுகளான 10 முதல் 15 கூடுதல் பிரதிவாதிகள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டு, இ.ம.எண்.06/2023 நாள் 14.02.2024 உத்தரவின்படி வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

(**இ.ம.எண்.09/2025 நாள் 13.08.2025 உத்தரவின்படி காலம்சென்ற 4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 16 முதல் 19 கூடுதல் பிரதிவாதிகள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

இவ்வழக்கானது 07.04.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி காலம்சென்றுவிட்ட நிலையிலும், 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 4 முதல் 9 பிரதிவாதிகள் 19.01.2026ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், காலம்சென்ற 3ம் பிரதிவாதியின் வாரிசுகளான 10 முதல் 15 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 10 முதல் 15 பிரதிவாதிகள் 29.08.2024ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், காலம்சென்ற 4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 16 முதல் 19 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 16 முதல் 19 பிரதிவாதிகள்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:23:43 +0530

17.10.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சீர்திருத்த வழக்குரை, 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை, வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாத உரைகள் ஆகியவைகளை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

வாதியால் இவ்வழக்கானது, பிராதின் 2 வது தபசில் சொத்து வாதி மற்றும் 1, 2 மற்றும் 5 முதல் 15 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொது நடைபாதையென தீர்மானித்து, அதற்கு அனுசரணையாக வாதி எப்போதும்போல் பிராதின் 2 வது தபசில் சொத்தை பொதுநடைபாதையாக பயன்படுத்தி அனுபவம் செய்து வருவதை 1 ம் பிரதிவாதியோ, அவரின் வாரிசுகளோ, வகையாட்களோ, வேலையாட்களோ, ஏஜெண்ட்களோ அல்லது மற்றவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு 1 ம் பிரதிவாதி வகையறாக்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும், பிராதின் 2 வது தபசில் சொத்தின் ஒரு பகுதியில் 1 ம் பிரதிவாதி நூதனமாக ஏற்படுத்தியுள்ள 3 வது தபசில் அமைப்புகளை இந்நீதிமன்றம் நிர்ணயிக்கும் ஓர் தினத்திற்குள் அப்புறப்படுத்திப் போகும்படிக்கும், தவறும் பட்சத்தில் வாதியே இந்நீதிமன்றம் மூலமாக 1 ம் பிரதிவாதியின் செலவில் அப்புறப்படுத்திப் போகும் வகையில் வலியுறுத்துக் கட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.24 17:23:50 +0530

1) <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u> :

பிராதின் 1வது தபசில் கண்டதுமான சொத்தும் அதன் தென்புறம் உள்ள சொத்தும் ஆதியில் 1ம் பிரதிவாதிக்கு கழுகுமலை சார்பதிவக பதிவுக்கிரைய ஆவண எண்.813/1991 ன்படி சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், 1ம் பிரதிவாதி வாதியிடம் சரியான பிரதிபிரயோஜனத்தைப் பெற்றுக்கொண்டு பிராதின் 1வது தபசில் சொத்தை காலியிடமாக 17.12.1991 தேதிய பதிவுக்கிரைய ஆவணமூலம் வாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்றும், அப்பால் பிராதின் 1வது தபசில் சொத்தில் வாதி கடந்த 1993ம் வருடம் வீடுகட்டி அதற்கு வாதி பெயரில் 1/178 என பஞ்சாயத்தில் வரிவிதிப்பு ஏற்பட்டும், மின் இணைப்பு எண்.190 என ஏற்பட்டும் வாதியே சொத்துவரி மற்றும் மின் கட்டண வரி செலுத்தி பிராதின் 1வது தபசில் சொத்தை சர்வசுதந்திரமாக ஆண்டு அனுபவம் செய்து வருகிறார் என்றும், பிராதின் 1வது தபசில் சொத்தை 1ம் பிரதிவாதி வாதிக்கு 17.12.1991 தேதிய கிரைய மூலம் கிரையம் கொடுக்கும்போதே அந்த கிரைய ஆவணத்தில் பொதுநடைபாதைக்கு கிழக்கு என்று மால் குறிப்பிட்டே கிரையம் கொடுத்துள்ளார் என்றும், 1ம் பிரதிவாதி பிராதின் 1வது தபசில் சொத்திற்கு அடுத்த தென்புறம் உள்ள 3 செண்ட் இடத்தை 29.01.1991 தேதிய பதிவுக்கிரைய ஆவணம் மூலம் தர்மராஜ் குமாரர் முத்தையா என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், அந்த ஆவணத்திலும் பொதுநடைபாதைக்கு கிழக்கு என்று எல்கைமால் குறிப்பிட்டே கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரையத்தை பெற்ற முத்தையா என்பவர் அவர் கிரையம் பெற்ற சொத்தை 1ம் பிரதிவாதியின் மனைவியான 2ம் பிரதிவாதிக்கு 08.06.2004 தேதிய பதிவுக்கிரைய ஆவணமூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றும், அந்த கிரைய ஆவணத்திலும் தென்வடல் பொது நடைபாதைக்கும் கிழக்கு என்று மால் காட்டியே கிரையம் கொடுத்துள்ளார் என்றும், இந்த 2ம் பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற சொத்தில் வீடுகட்டி உள்ளார் என்றும், அது பிராது பிளானில் 2ம் பிரதிவாதியின் வீடு என்று அடையாளம் காட்டப்பட்டுள்ளது என்றும், 2ம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:23:59 +0530

பிரதிவாதியின் அடுத்த தெற்கே 1ம் பிரதிவாதி வீடுகட்டியுள்ளார் என்றும், வாதி வீட்டிற்கு மேற்குமுகமாக வாசல் இருந்து அந்த வாசல் வழியாக வாதி தெற்குநோக்கி வந்து பிராது பிளானில் காட்டப்பட்டுள்ள செவல்குளம்–குருவிகுளம் பிரதான சாலைக்கு சென்றுபோய் வரவேண்டும் என்றும், அந்த பாதையை தவிர வாதி அவர் வீட்டிற்கு சென்று போய்வர வேறு பாதை ஏதும் கிடையாது என்றும், ஆதலால் பிராதின் 2 வது தபசில் சொத்தாக குறிப்பிட்டுள்ள தென்வடல் பொதுபாதை வாதி அவரின் சொத்தை அனுபவித்துக் கொள்ள மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படும் பாதையாகும் என்றும், பிராதின் 2 வது தபசில் சொத்து பிராது பிளானில் A B C D என்று அடையாளம் காட்டப்பட்டுள்ளது என்றும், பிராதின் 2 வது தபசில் சொத்திற்கு மேற்கே வடபுறம் இருந்து தென்புறம் வரை 3 முதல் 9 பிரதிவாதிகளின் வீடுகளும் மனையும் இருந்து வருகிறது என்றும், 3 முதல் 9 பிரதிவாதிகளும் அவர்கள் இடத்திலிருந்து கீழ்புறம் பொது நடைபாதைக்கென 3 அடி அகல இடத்தை காலிமனையாக விட்டு, அவர்கள் சொத்திலிருந்து பிராதின் 2 வது தபசில் சொத்தை நோக்கி வாசல் விட்டுள்ளார்கள் என்றும், வாதியும் 1ம் பிரதிவாதியும் அவர்கள் இடத்திலிருந்து மேற்குபக்கம் 3 அடி அகல காலியிடம் விடப்பட்டு பிராதின் 2 வது தபசில் பொதுபாதை பூமியில் 1991 ம் வருடம் மத்தியில் ஏற்படுத்தப்பட்டு அதுமுதல் உபய வாதிகள் அனைவரும் பிராதின் 2 வது தபசில் சொத்தை பொதுபாதையாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், பிராதின் 2 வது தபசில் பொதுநடைபாதை வழியாக உபயவாதிகளும் அவரவர் இடங்களுக்கு சென்றுபோய் வருகிறார்கள் என்றும், இந்த 1ம் பிரதிவாதி கடந்த 18.07.2015 ல் பிராதின் 2 வது தபசில் பொதுபாதையின் மத்தியில் தென்வடலாக பொதுபாதையை மறித்து கல்தூண்கள் நட்டி அதில் கம்பிவேலி போட எத்தணித்தார் என்றும், வாதி 1ம் பிரதிவாதியின் செய்கையை ஆட்சேபித்து குருவிகுளம் காவல்நிலையத்தில் கடந்த 03.12.2015 ல் புகார் மனு கொடுத்து, அந்த மனு மனு எண்.240/2015 என விசாரணைக்கு எடுக்கப்பட்டு அதில் நடந்த விசாரணையில் வாதியை சிவில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:24:08 +0530

நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்திவிட்டார்கள் என்றும், இந்நிலையில், 1ம் பிரதிவாதி அவரது தகாத செல்வாக்கை பயன்படுத்தி வாதியின் ஆட்பேணையையும் மீறி கடந்த 2015ம் வருடம் டிசம்பர் முதல் வார வாக்கில், பிராதின் 2வது தபசில் தென்வடல் பொதுபாதையில் 20 கல்தூண்கள் நட்டி, அதில் கம்பிவேலியும் ஏற்படுத்திவிட்டார் என்றும், அவ்விதம் கம்பிவேலி ஏற்படுத்திவிட்ட பகுதி பிராதின் 3வது தபசிலாகவும், பிராது பிளானில் E F என்றும் அடையாளம் காட்டப்பட்டுள்ளது என்றும், 1ம் பிரதிவாதி 3ம் தபசில் கல்தூண் வேலிகளை அமைத்துவிட்டதால் வாதியும் 3 முதல் 9 பிரதிவாதிகளும் அவரவர்கள் வீடுகளுக்கு தங்கு தடையின்றி சென்றுபோய் வர இயலவில்லை என்றும், அதோடு பிரதான சாலையில் இருந்து அவரவர் வீடுகளுக்கு இருசக்கர வாகனங்களையோ, நான்கு சக்கர வாகனங்களையோ கொண்டு செல்ல இயலவில்லை என்றும், மேலும் மின்வாரியத்தில் இருந்து 2வது தபசில் சொத்தில் இரு மின்கம்பங்களும் நட்டப்பட்டுள்ளன என்றும், அந்த மின்கம்பங்கள் இருக்கும் இடமும் பிராது பிளானில் அடையாளமிட்டு காட்டப்பட்டுள்ளது என்றும், அந்த மின்கம்பங்களில் பஞ்சாயத்தில் இருந்து தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளது என்றும், அந்த மின்கம்பங்களில் இருந்துதான் உபயவாதிகளின் வீடுகளுக்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆதலால் பிராதின் 2வது தபசில் சொத்து உபய வாதிகளுக்கு பாத்தியப்பட்ட ஒரு தென்வடல் பொது பாதை என்றும், எனவே, பிராதின் 2வது தபசில் சொத்தை தனிப்பட்ட ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து அதில் கல்தூண்கள் நட்டி கம்பிவேலி அமைத்துக்கொள்ள சட்டப்படி எவ்வித உரிமையும் இயலாது என்றும், ஆதலால், வாதியால் இவ்வழக்கு பிராதின் 2வது தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் அதற்கு அனுசரணையான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் பிராதின் 3வது தபசில் சொத்தை பொறுத்து வலியுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:24:17 +0530

**2) <u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:**

வாதியின் பிராது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதில்லை என்றும், வாதி பிராதில் கூறியிருப்பது போல் தபசில் புல எண்.273/1 என இருந்து வருவதாக கூறுவது சரியல்ல என்றும், பிராதின் தபசில் புல எண்.273/1 என்பது 273/1A மற்றும் 273/1B என்று இரு பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், வாதி பிரஸ்தாபம் செய்திருப்பதுபோல் 2ம் தபசில் பாதை என்பது இந்த 1, 2 பிரதிவாதிகள் மற்றும் வாதி ஆகியோருக்கு பாத்தியப்பட்ட புல எண்.273/1Bக்கு அடுத்த மேல்புறம் உள்ள புல எண்.273/1A–ல் இருந்து வருகிறது என்றும், உண்மையாதெனில், 1ம் பிரதிவாதி கடந்த 21.10.1991 தேதிய பதிவுகிரைய ஆவணம் மூலம் வடக்கு குருவிகுளம் கிராமத்தை சேர்ந்த நாரணம்மாள் மற்றும் கிருஷ்ணம்மாள் ஆகியோர்களிடம் இருந்து பிராதின் தபசில் புல எண்.273/1ல் மொத்த விஸ்தீரணம் செண்ட் 66ல் கீழ்புறம் செண்ட் 33ல் உள்ள இடத்தினை கிரையம் பெற்று சர்வ சுதந்திர பாத்தியதையுடன் ஆண்டு அனுபவம் செய்து வந்திருக்கிறார் என்றும், மேற்படி ஆவணத்திலேயே மேற்படி செண்ட் 33 இடத்திற்கு மேல் பக்கம் வேதமாணிக்கம் இடம் இருப்பதாக காண்பிக்கப்பட்டு இருக்கிறது என்றும், மேல்பக்கம் வாதி பிரஸ்தாபிப்பது போல் பாதை எதுவும் இருப்பதாக துலங்காது என்றும், மேலும், 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மேற்படி 33 செண்டிற்கு வருவாய்துறையில் புல எண்.273/1B என உட்பிரிவு செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி பெயருக்கு வருவாய் துறையிலிருந்து பட்டா எண்.1234 என பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது என்றும், அதேபோல் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட புல எண்.273/1 Bக்கு அடுத்த மேல்புறம் உள்ள செண்டு 33 இடத்திற்கு பாத்தியஸ்தரான வேதமாணிக்கம் என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தினை பல்வேறு வீட்டு மனைகளாக பிரிவினை செய்து அவ்வாறு பிரிவினை செய்த மனைகளுக்கு பாதை வேண்டும் என கருதி கிழமேல் சுமார் 6 அடி அகலம் கொண்ட தென்வடல் பாதையை அவருக்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:24:26 +0530

பாத்தியப்பட்ட அவருக்கு பாத்தியப்பட்ட செண்டு 33 இடத்தில் கீழ்பக்கம் கடந்த 1991ம் ஆண்டு ஏற்படுத்தி அதன்பின்பு 3 முதல் 7 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு வீட்டு மனைகளாக விற்பனை செய்து இருக்கிறார் என்றும், மேலும் வேதமாணிக்கம் 9ம் பிரதிவாதி அப்பாத்துரை என்பவருக்கு கிரையம் கொடுத்த இடத்திற்கு அடுத்த வடபுறம் உள்ள இடத்தினை மேற்படி வேதமாணிக்கம் (8ம் பிரதிவாதி) அவரது பயன்பாட்டிற்காக வைத்து கொண்டார் என்றும், எனவே, வாதி கூறும் பாதை என்பது புல எண்.273/1B–யில் அமைந்துள்ளது என்றும், இந்நிலையில் வாதியின் நெருங்கிய உறவினரான 8ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட புல எண்.273/1B–யில் வாதியும் மற்றும் முத்தையா என்பவரும் கிரையம் கேட்டபோது அவருக்கு கிரையம் கொடுப்பதற்கு வேறு இடம் இல்லாத காரணத்தால் 8ம் பிரதிவாதி 1ம்பிரதிவாதியிடம் இந்த வாதிக்கும் மற்றும் முத்தையா என்பவருக்கும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட புல எண்.273/1 B–ன் வடகடைசியில் தலா 3 செண்டு விகிதம் கிரையம் கொடுக்கும்படியும் அவ்வாறு வாதி மற்றும் முத்தையா ஆகியோர்களுக்கு 1ம் பிரதிவாதி கிரையம் கொடுக்கும் பட்சத்தில் 8ம் பிரதிவாதி பாதைக்காக புல எண்.273/1A–ல் ஏற்படுத்தப்பட்ட பாதையினை பயன்படுத்திக் கொள்ள 8ம் பிரதிவாதிக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை எனவும், மேலும், வாதி மற்றும் முத்தையா ஆகியோர்களும் புல எண்.273/1A–ல் உள்ள பாதையை பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் 1ம் பிரதிவாதியிடம் தெரிவித்து கேட்டுக் கொண்டதன் பெயரில் 1ம் பிரதிவாதி வாதிக்கு கடந்த 17.12.1991 தேதியன்று பதிவு கிரைய ஆவணம் மூலம் புல எண்.273/1 B–யில் வடகடைசியில் 3 செண்டு இடமும் அதற்கு அடுத்தார் போல் தென் பக்கம் 3 செண்டு இடம் முத்தையா என்பவருக்கு கடந்த 29.01.1991 தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்து இருக்கிறார் என்றும், இந்த நிலையில் 1ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்ற முத்தையா என்பவர் கிரையம் பெற்ற இடத்தில் வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த பொழுது இந்த 8ம் பிரதிவாதி புல எண்.273/1A–ல் உள்ள

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.24 17:24:35 +0530

பாதையினை பயன்படுத்த கூடாது என தடுத்ததால் மேற்படி முத்தையா வீடு கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால் 1ம் பிரதிவாதி மேற்படி முத்தையா என்பவரிடம் இருந்து அவருக்கு கிரையம் கொடுத்த இடத்தை மீண்டும் 1ம் பிரதிவாதியின் மனைவியான 2ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் பெற்றுக் கொண்டார் என்றும், அதைபோல் 1ம் பிரதிவாதி வாதியை சந்தித்து அவருக்கும் புல எண்.273/1A-ல் பாதை சம்பந்தமாக ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் 1ம் பிரதிவாதி, வாதிக்கு கிரையம் கொடுத்த இடத்தினையும் திரும்ப மறு கிரையம் பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக தெரிவித்து இருக்கிறார் என்றும், அதற்கு வாதியும் 8ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியை நேரில் சந்தித்து வாதிக்கு அவர்களுடைய வீட்டிற்கு சென்று வர புல எண்.273/1A-ல் உள்ள பாதையினை பயன்படுத்தி கொள்ள முழு சம்மதமும் தருவதாக கூறியதற்கு இணங்க வாதி அவருக்கு 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த 1ம் தபசில் இடத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றும், எனவே வாதி அவர் வீடு கட்டிய காலம் முதல் புல எண்.273/1 A-ல் அமைந்துள்ள தென்வடல் பாதையினை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார் என்றும், வாதி கூறியதை போல 1ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் மேற்கு பக்கம் மூன்று அடி அகலம் காலி இடம் பாதைக்காக கொடுத்துள்ளார் என கூறி இருப்பது பொய்யான ஒன்றாகும் என்றும், மேலும் வாதி அவர் தாக்கல் செய்துள்ள பிராது மாதிரி வரைபடத்தில் ஏதோ 3 முதல் 9 பிரதிவாதிகள் தொடர்ச்சியாக வீடு கட்டி மேற்படி வீடுகள் அனைத்திற்கும் கிழக்கு நோக்கி வாசல் அமைத்திருப்பதாக வரைபடத்தில் காண்பித்துள்ளது முற்றிலும் மோசடியான ஒன்றாகும் என்றும், வாதி பிராதில் கூறியுள்ள வழக்கும் வழக்கு மூலமும் தவறானது என்றும், வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரை கட்டணமும் அதற்கான சட்டப்பிரிவும் தவறானது என்றும், எனவே, வாதி வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:24:45 +0530

3) இவ்வழக்கின் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் காலம்சென்றுவிட்டனர். 5 முதல் 19 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், இந்நீதிமன்றத்தில் ஆஜராகததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.

4) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட திருத்தப்பட்ட வழக்குரை, 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக **08.08.2016ம்** தேதியில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளன.

1. பிராது 2வது தபசில் சொத்து உபய வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொது பாதை என்பது சரியா?
2. பிராது 2வது தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
3. பிராது 2வது தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
4. பிராது 2வது தபசில் சொத்தில் ஒரு பகுதியில் 1ம் பிரதிவாதி அமைத்துள்ள 3ம் தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரும் வலியுறுத்துக் கட்டளை வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
5. வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

5) இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி ஆரம்பத்தில் வா.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் ஆஜராகி முதல் விசாரணை வாக்குமூலத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தபோதிலும், வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.11/2026 ஆனது 12.02.2026 அன்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதன் பேரில், மேற்கண்ட வா.சா.1ன் முதல்நிலை சாட்சியம் நீக்கம் செய்யப்பட்டு, பின்னர், வாதியின் மகனும் பொது அதிகார முகவருமான அந்தோணி என்பவர் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வாதிகள் தரப்பில், வைரவன் என்பவர் வா.சா.2 ஆகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:24:54 +0530

மேலும், வாதி தரப்பில், வா.சா.1 மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) மேலும், இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில், பி.வா.சா.1 மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7) எழுவினா 1 :**

- பிராது 2வது தபசில் சொத்து உபய வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொது பாதை என்பது சரியா?

8) இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி கடந்த 21.10.1991 தேதிய பதிவுகிரைய ஆவணம் மூலம் நாரணம்மாள் மற்றும் கிருஷ்ணம்மாள் ஆகியோர்களிடம் இருந்து பிராதின் தபசில் புல எண்.273/1ல் மொத்த விஸ்தீரணம் செண்ட் 66ல் கீழ்புறம் செண்ட் 33னை கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்தார் என்பதும், மேற்படி செண்ட் 33ல் வடகடைசியில் செண்ட் 3–னை காலியிடமாக நான்கு பக்க எல்கை விவரங்களுடன் 17.12.1991 அன்று கிரைய ஆவணமூலம் வாதிக்கு 1வது பிரதிவாதி பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்பதும், மேற்படி இடத்தில் வாதி வீடுகட்டி அனுபவித்து வருகிறார் என்பதும், 1ம் பிரதிவாதி பிராதின் 1வது தபசில் சொத்திற்கு அடுத்த தென்புறம் உள்ள 3 செண்ட் இடத்தை 29.01.1991 அன்று கிரைய ஆவணம் மூலம் முத்தையா என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி கிரையத்தை பெற்ற முத்தையா என்பவர் அவர் கிரையம் பெற்ற சொத்தை 1ம் பிரதிவாதியின் மனைவியான 2ம் பிரதிவாதிக்கு 08.06.2004 அன்று கிரைய ஆவணமூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்பதும், இந்த 2ம் பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற சொத்தில் வீடுகட்டி உள்ளார் என்பதும், 2ம் பிரதிவாதியின் அடுத்த தெற்கே 1ம் பிரதிவாதி

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.24 17:25:01 +0530

வீடுகட்டியுள்ளார் என்பதும், 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 33 செண்ட்க்கு அடுத்த மேல்புறம் உள்ள 33 செண்டு 8 வது பிரதிவாதி வேதமாணிக்கம் என்பவர் அவருக்கு பாத்தியப்பட்டது என்பதும், மேற்படி இடத்தினை 8 வது பிரதிவாதி பல்வேறு வீட்டு மனைகளாக பிரிவினை செய்து 3 முதல் 7 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு வீட்டு மனைகளாக விற்பனை செய்துவிட்டார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

9) இவ்வழக்கில் வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதி வீட்டிற்கு மேற்குமுகமாக உள்ள 2 வது தபசில் பொதுபாதை தவிர வாதி அவர் வீட்டிற்கு சென்று போய்வர வேறு பாதை ஏதும் கிடையாது என்றும், வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் 3 முதல் 9 பிரதிவாதிகளால் அவர்கள் இடத்திலிருந்து பொது நடைபாதைக்கு என 3 அடி அகல காலியிடம் விடப்பட்டு பிராதின் 2 வது தபசில் பொதுபாதை பூமியில் 1991ம் வருடம் மத்தியில் ஏற்படுத்தப்பட்டு அதுமுதல் உபய வாதிகள் அனைவரும் பிராதின் 2 வது தபசில் சொத்தை பொதுபாதையாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், பிராதின் 2 வது தபசில் பொதுநடைபாதை வழியாக உபயவாதிகளும் அவரவர் இடங்களுக்கு சென்றுபோய் வருகிறார்கள் என்றும், இந்நிலையில், 1ம் பிரதிவாதி அவரது தகாத செல்வாக்கை பயன்படுத்தி வாதியின் ஆட்பேணையையும் மீறி கடந்த 2015ம் வருடம் டிசம்பர் முதல் வார வாக்கில், பிராதின் 2 வது தபசில் தென்வடல் பொதுபாதையில் 20 கல்தூண்கள் நட்டி, அதில் கம்பிவேலியும் ஏற்படுத்திவிட்டார் என்றும், எனவே, வாதிக்கு வழக்கில் கோரிய பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது என்றும் வாதிட்டார்.

10) இவ்வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், பிராதின் தபசில் புல எண்.273/1 என்பது 273/1A மற்றும் 273/1B என்று இரு பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும்,

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.24 17:25:09 +0530

மேலும், வாதி பிரஸ்தாபம் செய்திருப்பதுபோல் 2ம் தபசில் பாதை என்பது இந்த 1, 2 பிரதிவாதிகள் மற்றும் வாதி ஆகியோருக்கு பாத்தியப்பட்ட புல எண்.273/1B க்கு அடுத்த மேல்புறம் உள்ள புல எண்.273/1A−ல் இருந்து வருகிறது என்றும், வேதமாணிக்கம் என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தினை பல்வேறு வீட்டு மனைகளாக பிரிவினை செய்து அவ்வாறு பிரிவினை செய்த மனைகளுக்கு பாதை வேண்டும் என கருதி கிழமேல் சுமார் 6 அடி அகலம் கொண்ட தென்வடல் பாதையை அவருக்கு பாத்தியப்பட்ட அவருக்கு பாத்தியப்பட்ட செண்டு 33 இடத்தில் கீழ்பக்கம் கடந்த 1991ம் ஆண்டு ஏற்படுத்தி அதன்பின்பு 3 முதல் 7 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு வீட்டு மனைகளாக விற்பனை செய்து இருக்கிறார் என்றும், வாதி மற்றும் முத்தையா ஆகியோர்களும் புல எண்.273/1A−ல் உள்ள பாதையை பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் 1ம் பிரதிவாதியிடம் வேதமாணிக்கம் தெரிவித்து கேட்டுக் கொண்டதன் பெயரில் 1ம் பிரதிவாதி வாதிக்கு கடந்த 17.12.1991 தேதியன்று பதிவு கிரைய ஆவணம் மூலம் புல எண்.273/1 B−யில் வடகடைசியில் 3 செண்டு இடமும் அதற்கு அடுத்தார் போல் தென் பக்கம் 3 செண்டு இடம் முத்தையா என்பவருக்கு கடந்த 29.01.1991 தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்து இருக்கிறார் என்றும், வாதி அவர் வீடு கட்டிய காலம் முதல் புல எண்.273/1 A−ல் அமைந்துள்ள தென்வடல் பாதையினை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார் என்றும், வாதி கூறியதை போல 1ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் மேற்கு பக்கம் மூன்று அடி அகலம் காலி இடம் பாதைக்காக கொடுத்துள்ளார் என கூறி இருப்பது பொய்யான ஒன்றாகும் என்றும், வாதி பிராதில் கூறியுள்ள வழக்கும் வழக்கு மூலமும் தவறானது என்றும், எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

11) இவ்வழக்கு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கு 2வது தபசில் பொதுநடைபாதை என காட்டப்பட்டுள்ள சொத்தின் உரிமை குறித்தும், இருப்பிட

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.24 17:25:16 +0530

அமைப்பு, விஸ்தீரணம், அளவுகள் மற்றும் அடையாளம் குறித்தும் கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

12) இந்நிலையில், 2 வது தபசில் சொத்து உண்மையில் ஒரு பொது நடைபாதை என்பதையும், மேற்படி நடபாதையில் வாதிக்கு உரிமை உண்டு என்பதையும், வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ள 2 வது தபசில் சொத்தின் இருப்பிட அமைப்பு, விஸ்தீரணம், அளவுகள் மற்றும் அடையாளம் சரியானது என்பதையும், வாதி, 1 ம் பிரதிவாதியால் அவர்கள் இடத்திலிருந்து 3 அடி அகல காலியிடமும் மற்றும் 3 முதல் 9 பிரதிவாதிகளால் அவர்கள் இடத்திலிருந்து 3 அடி அகல காலியிடமும் பொது நடைபாதைக்கு என விடப்பட்டு, பிராதின் 2 வது தபசில் பொதுபாதை பூமியில் 1991 ம் வருடம் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது என்பதையும், 1 ம் பிரதிவாதி 2015 ம் வருடம் டிசம்பர் முதல் வாரத்தில், பிராதின் 2 வது தபசில் தென்வடல் பொதுபாதையில் 3 வது தபசில் ஆக்கிரமிப்பினை ஏற்படுத்திவிட்டார் என்பதையும் நிரூபிக்கும் சுமை இவ்வழக்கு வாதியையே சார்ந்தது ஆகும்.

13) இவ்வழக்கு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆக 1 ம் பிரதிவாதி, நாரணம்மாள் மற்றும் கிருஷ்ணம்மாள் ஆகியோர்களிடம் இருந்து பிராதின் தபசில் புல எண்.273/1 ல் மொத்த விஸ்தீரணம் செண்ட் 66 ல் கீழ்புறம் செண்ட் 33 னை கிரையம் பெற்றதற்கான 21.10.1991 தேதியிட்ட கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1–னை பார்வையிடும்போது, அதில், தபசில் சொத்து விபரத்தில்,

> “........அயன் புஞ்சை சர்வே 273/1 0.26.5 (செ66)ல் கீழ்புறம் செ 33 க்கு மால் வேதமாணிக்க புஞ்சைக்கு கிழக்கு ச.கருப்பன் புஞ்சைக்கு தெற்கு நல்லம்மாள் புஞ்சைக்கு மேற்கு நடபாதைக்கு வடக்கு இம்மாலுக்குள்பட்டதும்........"

என கண்டு எழுதப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.24 17:25:24 +0530

14) மேற்கண்ட பி.வா.சா.ஆ.1ன் பரிசீலனையில் இருந்து, மேற்படி ஆவணம் பிறப்பிக்கப்பட்ட 21.10.1991 காலகட்டத்தில் 1வது பிரதிவாதி கிரையம் பெற்ற தபசில் புல எண்.273/1ல் கீழ்புறம் செண்ட் 33 செண்டிற்கு மேற்கில் வேதமாணிக்கம் இடம் என 8வது பிரதிவாதி இடம் மட்டுமே குறிப்பிடப்பட்டிருப்பதையும், 1வது பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்கு மேற்கில் எவ்வித பாதை அமைப்புகளும் இல்லை என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

15) மேலும், இவ்வழக்கு வாதி தரப்பில் 8வது பிரதிவாதி வேதமாணிக்கம், நாரணம்மாள் மற்றும் கிருஷ்ணம்மாள் ஆகியோர்களிடம் இருந்து பிராதின் தபசில் புல எண்.273/1ல் மொத்த விஸ்தீரணம் செண்ட் 66ல் மேல்புறம் செண்ட் 33னை கிரையம் பெற்றதற்கான 21.10.1991 தேதியிட்ட கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.11–னை பார்வையிடும்போது, அதில், தபசில் சொத்து விபரத்தில்,

> "........அயன் புஞ்சை சர்வே 273/1 0.26.5 (செ66)ல் மேல்புறம் செ 33க்கு மால் ஊரணிக்கு கிழக்கு ச.கருப்பன் புஞ்சைக்கு தெற்கு தங்கமணி புஞ்சைக்கு மேற்கு நடபாதைக்கு வடக்கு இம்மாலுக்குள்........"

என கண்டு எழுதப்பட்டுள்ளது.

16) மேற்கண்ட வா.சா.ஆ.11ன் பரிசீலனையில் இருந்து, மேற்படி ஆவணம் பிறப்பிக்கப்பட்ட 21.10.1991 காலகட்டத்தில் 8வது பிரதிவாதி வேதமாணிக்கம் கிரையம் பெற்ற தபசில் புல எண்.273/1ல் மேல்புறம் செண்ட் 33 செண்டிற்கு கிழக்கில் தங்கமணி நாடார் புஞ்சை என 1வது பிரதிவாதி இடம் மட்டுமே குறிப்பிடப்பட்டிருப்பதையும், 8வது பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்கு கிழக்கில் எவ்வித பாதை அமைப்புகளும் இல்லை என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:25:32 +0530

17) மேலும், இவ்வழக்கு வாதி தரப்பில் பிராதின் 1வது தபசில் சொத்தினை வாதி 1வது பிரதிவாதியிடம் 17.12.1991ல் கிரையம் பெற்ற ஆவணம் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1–னை பார்வையிடும்போது, அதில், தபசில் சொத்து விபரத்தில்,

> “........அயன் புஞ்சை சர்வே 273/1 லட்டர் ஏர் 0.26.5ல் கீழ்புறம் செ 33ல் வடகடைசியில் செண்ட் 3க்கு மால் பொது நடைபாதைக்கு கிழக்கு, ச.கருப்பன் புஞ்சைக்கு தெற்கு, நல்லம்மாள் புஞ்சைக்கு மேற்கு, என் கையிருப்பு புஞ்சைக்கு வடக்கு ........"

என கண்டு எழுதப்பட்டுள்ளது.

18) மேற்கண்ட வா.சா.ஆ.1ல் வாதி கிரையம் பெற்ற 1வது தபசில் சொத்தான செண்ட் 3க்கு மேற்கு எல்கையில் பொதுநடைபாதை இருப்பதாக 1வது பிரதிவாதி எல்கையில் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

19) மேலும், இவ்வழக்கு வாதி தரப்பில் 1ம் பிரதிவாதி பிராதின் 1வது தபசில் சொத்திற்கு அடுத்த தென்புறம் உள்ள 3 செண்ட் இடத்தை 29.01.1991 அன்று முத்தையா என்பவருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் வா.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.13னை பார்வையிடும்போது, அதில், தபசில் சொத்து விபரத்தில்,

> “........சர்வே 273/1 – ஏர் 0.26.5 (செ66)ல் கீழ்புறம் செ 33ல் வடபுறம் செ 3 (1307 சதுரடி)க்கு மால் நல்லம்மாள் புஞ்சைக்கு மேற்கு நடைபாதைக்கு கிழக்கு சாந்தாய்யம்மாள் மனைக்கு தெற்கு என் கையிருப்பு புஞ்சைக்கு வடக்கு இம்மாலுக்குள்பட்டதும் தபசில் சரி........"

என கண்டு எழுதப்பட்டுள்ளது.

20) மேற்கண்ட வா.சா.ஆ.13 ஆவணத்திலும் மேற்கு எல்கையில் பொதுநடைபாதை உள்ளதாக 1வது பிரதிவாதி குறிப்பிட்டிருப்பதை

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:25:42 +0530

இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

21) மேலும், இவ்வழக்கு வாதி தரப்பில் மேற்படி வா.சா.ஆ.13 மூலமாக 3 சென்டினை கிரையம் பெற்ற முத்தையா என்பவர் அவர் கிரையம் பெற்ற சொத்தை 1ம் பிரதிவாதியின் மனைவியான 2ம் பிரதிவாதிக்கு 08.06.2004 அன்று கிரையம் கொடுத்த ஆவணம் வா.சா.ஆ.14 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.14–னை பார்வையிடும்போது, அதில், தபசில் சொத்து விபரத்தில்,

> “.......சர்வே 273/1 – செ66 க்கு ஹெக்டர் 0.26.5 ல் கீழ்புறம் செண்ட் 33 ல் வடபுறம் செண்ட் 3 க்கு நான்குமால். நல்லம்மாள் புஞ்சைக்கும் பொது நடபாதைக்கும் கிழக்கு, சாந்தாயம்மாள் மனைக்கும் தெற்கு, தங்கமணி மனைக்கும் வடக்கும் இம்மாலுக்குள் செண்ட் 3 க்கு ச.அடி 1307 ம் உள்ள மனையும் தபசில் சரி......."

என கண்டு எழுதப்பட்டுள்ளது.

22) மேற்கண்ட வா.சா.ஆ.14 ஆவணத்திலும் மேற்கில் பொதுநடைபாதை உள்ளதாக முத்தையா தெரிவித்திருப்பதை ஏற்றுக்கொண்டு 1வது பிரதிவாதியின் மனைவியான 2வது பிரதிவாதி கிரையம் பெற்றிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

23) மேலே பரிசீலிக்கப்பட்ட வா.சா.ஆ.1 மற்றும் 13 ஆவணங்களில் மேற்கு எல்கையில் பொதுநடைபாதை இருப்பதாக 1வது பிரதிவாதியால் தெரிவிக்கப்பட்டபோதிலும், மேற்படி ஆவணங்களில் பொதுநடைபாதையின் நீள, அகலம் மற்றும் விஸ்தீரணம் விவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

24) மேலும், இவ்வழக்கு வாதி தரப்பில் 8வது பிரதிவாதி வேதமாணிக்கம் சர்வே எண்.273/1ல் மேல்புறம் உள்ள செண்டு 33 இடத்தில் 3 முதல் 7 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்த கிரைய ஆவணங்கள் வா.சா.ஆ.6 முதல்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.24 17:25:59 +0530

வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆவணங்களின் சொத்து விபரத்தை பார்வையிடும்போது, அதில், கிழக்கு எல்கையில் பொது நடைபாதை இருப்பதாக 8 வது பிரதிவாதியால் தெரிவிக்கப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. மேற்படி ஆவணங்களிலும் பொதுநடைபாதையின் நீள, அகலம் மற்றும் விஸ்தீரணம் விவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

25) மேலும், மேலே பரிசீலிக்கப்பட்ட வா.சா.ஆ.1, வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.14 ஆவணங்களில் வாதியால் வழக்குரையில் தெரிவிக்கப்பட்டதுபோல, வாதி, 1 ம் பிரதிவாதியால் அவர்கள் இடத்திலிருந்து 3 அடி அகல காலியிடமும் மற்றும் 3 முதல் 9 பிரதிவாதிகளால் அவர்கள் இடத்திலிருந்து 3 அடி அகல காலியிடமும் பொது நடைபாதைக்கு என விடப்பட்டிருப்பதாக எந்த விபரங்களும் குறிப்பிடப்படவில்லை. மேலும், மேற்படி சங்கதியை உறுதிப்படுத்தும் வகையில் தனிநபர் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ இந்நீதிமன்றத்தில் வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை.

26) இந்நிலையில், மேற்படி வா.சா.ஆ.1, வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.14 ஆவணங்களில் உள்ள எல்கை குறிப்புகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வழக்கு 2 வது தபசில் சொத்தினை துல்லியமாக இந்நீதிமன்றத்தால் அடையாளம் காண இயலாது.

27) மேலும், இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி ஆரம்பத்தில் வா.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் ஆஜராகி முதல் விசாரணை வாக்குமூலத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தபோதிலும், பின்னர் வாதி தரப்பில் இவ்வழக்கின் வாதிக்கு இருகாதுகளும் சரியாக கேட்கவில்லை என்று வா.சா.1 ன் முதல்நிலை சாட்சியம் வாதியால் நீக்கம் செய்யப்பட்டு, வாதியின்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:26:08 +0530

மகனும் பொது அதிகார முகவருமான அந்தோணி என்பவர் வா.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

28) ஆனால், வாதிக்கு இருகாதுகளும் சரியாக கேட்காது என்பதற்கான மருத்துவ சான்றாவணங்கள் வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், இவ்வழக்கின் முக்கிய பிரச்சனையான சொத்தின் அடையாளம் மற்றும் பாதை பயன்பாடு போன்றவை குறித்து நேரடியாக அறிவு கொண்ட வாதி தாமே இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காமல் தவிர்த்திருப்பது வாதியின் வழக்கிற்கு பாதகமானது ஆகும்.

29) இதிலிருந்து, வாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தால் உண்மை விபரம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் என்ற காரணத்தினால் தான், வாதி இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என வாதிக்கு எதிராக (Adverse inference) இந்நீதிமன்றத்தால் அனுமானிக்கப்படுகிறது.

30) மேலும், வாதி தரப்பில் சாட்சியம் அளித்த வாதியின் மகனான வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

> "………1ம் பிரதிவாதியின் 33 செண்டிற்கு அடுத்த மேல்பக்கம் பாதை உள்ளதா என்றால் **வேதமாணிக்கம் அமைத்த பாதை உள்ளது அது அவருக்கு பாத்தியப்பட்டது**……"

என சாட்சியம் அளித்துள்ளார்.

31) மேற்கண்ட வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பரிசீலனையில் இருந்து, இவ்வழக்கின் வாதியின் மகனே 1ம் பிரதிவாதியின் 33 செண்டிற்கு அடுத்த மேல்பக்கம் உள்ள பாதை 8வது பிரதிவாதி வேதமாணிக்கம் அமைத்த பாதை என்றும், அது அவருக்குப் பாத்தியப்பட்ட பாதை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். இந்நிலையில், வாதி வழக்குரையில் 3 முதல் 9

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:26:18 +0530

பிரதிவாதிகளால் அவர்கள் இடத்திலிருந்து 2 வது தபசில் பொது நடைபாதைக்கு என 3 அடி அகல இடமானது விடப்பட்டதாக தெரிவித்திருப்பது முற்றிலும் உண்மையல்ல என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

32) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

".......என் தாயார் கிரையம் பெற்ற 3 செண்ட் இடத்திலும் வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் கட்டியுள்ள மேற்படி வீட்டின் வாசல் மேற்குநோக்கி உள்ளது என்றால் சரிதான். என் தாயார் கட்டியுள்ள மேற்படி வீட்டின் மேற்கில் பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி மேற்கில் உள்ள பாதை வழியாக வந்து மெயின்ரோட்டை அடையவேண்டும் என்றால் சரிதான். ......."

என சாட்சியம் அளித்துள்ளார்.

33) வாதியின் மகனான வா.சா.1 வாதி கிரையம் பெற்ற 3 செண்ட் இடத்திலும் வீடு கட்டப்பட்டுள்ளது என ஒப்புக்கொண்டுள்ள நிலையில், 1 ம் தபசில் சொத்திற்கு மேற்கில் 2 வது தபசில் பொதுநடைபாதைக்காக 3 அடி இடத்தை வாதி விட்டுக்கொடுத்ததாக வழக்குரையில் தெரிவித்திருப்பது உண்மையல்ல என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

34) மேலும், இவ்வழக்கில் வாதி தரப்பில் சாட்சியம் அளித்த வா.சா.2 தனது முதல் விசாரணையில் வழக்கு சொத்திற்கான பாதையை வாதி உட்பட உபயவாதிகள் பயன்படுத்தி வருவதாக சாட்சியம் அளித்தபோதிலும், குறுக்கு விசாரணையில்,"........ **உபயவாதிகள் பயன்படுத்தி வருவதாக நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள பாதையின் சர்வே எண், விஸ்தீரணம், நீள அகலம் என்ன என்றால் தெரியாது......"** என சாட்சியம் அளித்துள்ளார்.

35) மேலும், வழக்குரை 2 வது தபசில் சொத்தின் இருப்பிட அமைப்பு, விஸ்தீரணம், அளவுகள் மற்றும் அடையாளம் சரியானது என்பதை

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.24 17:26:26 +0530

இந்நீதிமன்றத்தில் நிரூபிக்கும் வகையில் இவ்வழக்கில், நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தபசில் சொத்தினை பார்வையிட வாதியால் இவ்வழக்கில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

36) மேலும், இவ்வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் பிராதின் தபசில் புல எண்.273/1 என்பது 273/1A மற்றும் 273/1B என்று இரு பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், 2ம் தபசில் பாதை என்பது இந்த 1, 2 பிரதிவாதிகள் மற்றும் வாதி ஆகியோருக்கு பாத்தியப்பட்ட புல எண்.273/1Bக்கு அடுத்த மேல்புறம் உள்ள புல எண்.273/1A-ல் இருந்து வருகிறது என்று கட்சி எடுக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.2 ஆக புல எண்.273/1Bக்கு 1வது பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆக புல எண்.273க்கான புல வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து, தபசில் சர்வே எண்.273/1 ஆனது 273/1A, 273/1B மற்றும் பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுவிட்டது என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

37) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், ".......**1996ம் ஆண்டே வேதமாணிக்கம் மற்றும் 1வது பிரதிவாதியின் இடம் மொத்தம் 66 செண்ட் 2 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்**......." என சாட்சியம் அளித்துள்ளார்.

38) இதிலிருந்து, இவ்வழக்கு வாதிக்கு 1வது பிரதிவாதி மற்றும் 8வது பிரதிவாதியின் சொத்துக்கள் 1996ம் ஆண்டே உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்ற விபரம் தெரிந்தும், தபசில் சொத்துக்களுக்கான புல எண் உட்பிரிவு பற்றிய விவரங்களை வழக்குரையில் தெரிவிக்காமல் இவ்வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:26:35 +0530

39) மேலும், வா.சா.1 டம் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையில், இவ்வழக்கில் வாதி நீதிமன்ற ஆணையரை நியமிக்க நடவடிக்கை எடுக்காதது குறித்தும், தபசில் சொத்துக்களுக்கான புல எண் உட்பிரிவு பற்றிய விவரங்களை வழக்குரையில் தெரிவிக்காதது குறித்தும் குறிப்பிட்டு கேள்விகள் கேட்டபிறகும் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய எவ்வித நடவடிக்கையும் வாதியால் மேற்கொள்ளப்படவில்லை.

40) இதிலிருந்து, இவ்வழக்கில், ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தபசில் சொத்துக்களை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டாலும், தபசில் சொத்துக்களுக்கான புல எண் உட்பிரிவு பற்றிய விவரங்களை வழக்கில் தெரிவிக்கப்பட்டாலும், வாதியின் வழக்கிற்கு சாதகமாக இருக்காது என்ற காரணத்தினால் தான் வாதி இவ்வழக்கில் ஆணையரை நியமனம் செய்யாமல் வேண்டுமென்றே தவிர்த்துள்ளார் என்ற அனுமானத்தை இந்நீதிமன்றம் வாதிக்கு எதிராக (Adverse inference) எடுத்துக்கொள்கிறது.

41) மேற்கண்ட பரிசீலனையில் இருந்து, வாதி தரப்பில் இவ்வழக்கு 2 வது தபசில் சொத்து உண்மையில் பொதுநடைபாதை என்பதையும், வழக்குரையில் தெரிவிக்கப்பட்ட மேற்படி சொத்தின் இருப்பிட அமைப்பு, விஸ்தீரணம், அளவுகள் மற்றும் அடையாளம் ஆகியவை சரியானது என்பதையும், வாதி, 1 ம் பிரதிவாதியால் அவர்கள் இடத்திலிருந்து 3 அடி அகல காலியிடமும் மற்றும் 3 முதல் 9 பிரதிவாதிகளால் அவர்கள் இடத்திலிருந்து 3 அடி அகல காலியிடமும் பொது நடைபாதைக்கு என விடப்பட்டது என்பதையும், இவ்வழக்கு 2 வது தபசில் சொத்தில் வாதிக்கு உரிமை இருப்பதையும் தகுந்த சாட்சிய, சான்றவாணங்களின் மூலமாக நிரூபணம் செய்ய தவறியுள்ளார் என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:26:44 +0530

42) எனவே, இவ்வழக்கு 2 வது தபசில் சொத்து உபயவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்பதை வாதி நிரூபணம் செய்ய தவறியுள்ளார் என **எழுவினா.1**–ற்கு வாதிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**43) எழுவினாக்கள். 2 மற்றும் 3** :–

- பிராது 2 வது தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
- பிராது 2 வது தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

44) மேற்கண்ட எழுவினா.1–ற்கான பரிசீலனையில் இருந்து, வாதி பிராதின் 2 வது தபசில் சொத்து உபய வாதிகளுக்குப் பாத்தியப்பட்ட பொது நடைபாதை என்பதையும், மேலும், வழக்கு 2 வது தபசில் சொத்தின் இருப்பிட அமைப்பு, அளவுகள், விஸ்தீரணம் மற்றும் துல்லியமான அடையாளம் ஆகியவற்றையும் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலமாக நிரூபணம் செய்ய தவறியுள்ளார் என இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ளது. இந்நிலையில், வாதி கோரியுள்ள விளம்புகை (Declaration) பரிகாரத்தை இந்நீதிமன்றத்தால் வழங்க இயலாது. அதேபோல், வழக்கு 2 வது தபசில் சொத்தில் வாதிக்கு உரிமை உள்ளது என்பது முதன்மையாக நிரூபிக்கப்படாத காரணத்தால், நிரந்தர உறுத்துக்கட்டளை (Permanent Injunction) பரிகாரத்தையும் வாதிக்கு இந்நீதிமன்றத்தால் வழங்க இயலாது.

45) எனவே, வாதிக்கு இவ்வழக்கில் கோரியவாறு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்று **எழுவினாக்கள் 2 மற்றும் 3**–ற்கு வாதிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:26:57 +0530

**46) <u>எழுவினா.4</u> :–**

- பிராது 2வது தபசில் சொத்தில் ஒரு பகுதியில் 1ம் பிரதிவாதி அமைத்துள்ள 3ம் தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரும் வலியுறுத்துக் கட்டளை வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

47) மேற்கண்ட எழுவினாக்கள் 1, 2 மற்றும் 3–ற்கான பரிசீலனையில் இருந்து, வாதி பிராதின் 2வது தபசில் சொத்து உபய வாதிகளுக்குப் பாத்தியப்பட்ட பொது நடைபாதை என்பதையும், மேலும், வழக்கு 2வது தபசில் சொத்தின் இருப்பிட அமைப்பு, அளவுகள், விஸ்தீரணம் மற்றும் துல்லியமான அடையாளம் ஆகியவற்றையும் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலமாக நிரூபணம் செய்ய தவறியுள்ளார் என்பதால் வாதிக்கு இவ்வழக்கில் கோரியவாறு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்று இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ளது.

48) மேலும், 1ம் பிரதிவாதி பிராதின் 2வது தபசில் சொத்தில் ஒரு பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து 3வது தபசில் அமைப்புகளை உருவாக்கியுள்ளார் என்பதும் வாதியால் தகுந்த சாட்சியங்களால் நிரூபிக்கப்படவில்லை.மேலும், இவ்வழக்கில் தபசில் சொத்துக்களின் நிலவரத்தை தெளிவுபடுத்த நீதிமன்ற ஆணையரை நியமிக்க வாதியால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததும், வாதியின் வழக்கிற்கு பாதகமாக அமைந்துள்ளது. வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் (Mandatory Injunction) வழங்க தேவையான அடிப்படை உரிமையும், அந்த உரிமை மீறப்பட்டதற்கான நிரூபணமும் இல்லாத நிலையில், வாதிக்கு இவ்வழக்கில் கோரியவாறு வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் இந்நீதிமன்றத்தால் வழங்க இயலாது.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:27:24 +0530

49) எனவே, வாதிக்கு இவ்வழக்கில் கோரியவாறு வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்று **எழுவினா.4**–ற்கு வாதிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**50) <u>எழுவினா.5 :–</u>**

- வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து, இவ்வழக்கு தரப்பினர்களால் எடுக்கப்பட்டுள்ள கட்சி மற்றும் மேலே தீர்மானிக்கப்பட்டுள்ள வழக்கெழுவினாக்கள்–1 முதல் 4–ஐ கருத்தில் கொண்டு தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தரப்பினர்கள் தங்களது செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் **எழுவினா–5** ற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**51) இறுதியாக,**

வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத் தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:27:33 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**1. வாதி தரப்பு சாட்சிகள் :–**

1. வா.சா.1 திரு.அந்தோணி (வாதியின் மகன் மற்றும் பவர் ஏஜெண்ட்)
2. வா.சா.2 திரு. வைரவன்

**2. வாதி தரப்பு சான்றவாணங்கள் :–**

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.12.1991 | 1ம் பிரதிவாதி வாதிக்கு வழக்கு 1வது தபசில் சொத்து குறித்து பிறப்பித்த கிரைய ஆவணம் – சான்றளிக்கப்பட்ட கணினி நகல் |
| வா.சா.ஆ.2 | 24.11.2015 | வாதி கதவு எண்.1/178க்கு செலுத்திய வீட்டு வரி ரசீது – அசல் |
| வா.சா.ஆ.3 | 23.11.2015 | வாதி மின் இணைப்பு எண்.190க்கு செலுத்திய மின் கட்டண ரசீது – அசல் |
| வா.சா.ஆ.4 | 03.12.2015 | வாதி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு – அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | 03.12.2015 | குருவிகுளம் காவல் நிலையத்தால் வழங்கப்பட்ட புகார் மனு ஏற்பு ரசீது – அசல் |
| வா.சா.ஆ.6 | 23.10.1991 | வேதமாணிக்கத்தால் 3ம் பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – சான்றிடப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 25.10.1991 | வேதமாணிக்கத்தால் 4ம் பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – சான்றிடப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 25.10.1991 | வேதமாணிக்கத்தால் 5ம் பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – கணினி நகல் |
| வா.சா.ஆ.9 | 07.01.1993 | வேதமாணிக்கத்தால் 6ம் பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – கணினி நகல் |
| வா.சா.ஆ.10 | 25.10.1991 | வேதமாணிக்கத்தால் 7ம் பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – கணினி நகல் |
| வா.சா.ஆ.11 | 21.10.1991 | 8வது பிரதிவாதி வேதமாணிக்கம் பெயரிலான கிரைய ஆவணம் – கணினி நகல் |

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:27:42 +0530

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.12 | 25.10.1991 | வேதமாணிக்கத்தால் 9ம் பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – கணினி நகல் |
| வா.சா.ஆ.13 | 29.01.1992 | 1ம் பிரதிவாதி முத்தையா என்பவருக்கு பிறப்பித்துக் கொடுத்த பதிவு கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.14 | 08.06.2004 | முத்தையா என்பவரால் 2வது பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.15 | -- | வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் |
| வா.சா.ஆ.16 | 27.01.2026 | வாதி அவரின் மகனான அந்தோணி என்பவருக்கு வழக்கை நடத்துவதற்கு கொடுத்த பதிவு செய்யப்படாத பொது அதிகார ஆவணம் – அசல் |

**3. 1, 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி** :–

1. பி.வா.சா.1 – திரு.தங்கமணி (1ம் பிரதிவாதி)

**4. 1, 2 பிரதிவாதிகள் தரப்பு சான்றவாணங்கள்** :–

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 21.10.1991 | 1வது பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | -- | புல எண்.273/1Bக்கு 1வது பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.1234 – கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.3 | -- | புல எண்.273க்கான புல வரைபடம் – கணினி நகல் |

**5. இதர பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றவாணங்கள்** :– **இல்லை**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.24 17:27:50 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>மு.மா.உ.நீ., சங்கரன்கோவில்</u>

அசல் வழக்கு எண்.406/2015

**தீர்ப்புரை** (Draft / Fair)

நாள் : 24.04.2026